ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம: ஸ்ரீமத் வரத குரவே நம:

## மணவாள மாமுனிகள்-வருஷ திருநட்சத்திரம் - ஐப்பசி - மூலம்



மாமுனிகள் - ஸ்ரீரங்கம்



மாமுனிகள் - திருவல்லிக்கேணி

## தனியன்

துலாயா மதுலே மூலே பாண்ட்யே குந்தீபுரீவரே /
ஸ்ரீஸேஷாம்ஸோத்பவம் வந்தே ரம்யஜமாதரம் முநிம் //

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் /
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் //

## வாழித்திருநாமம்

இப்புவியி லரங்கேசர்க் கீடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப்பிள்ளை யிணையடியோன் வாழியே
ஐப்பசியில் திருமூலத் தவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி யநந்தனென்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைல மேத்தவந்தோன் வாழியே
ஏராரு மெதிராச ரெனவுதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடம் முக்கோல் தரித்தான் வாழியே
மூதரிய மணவாள மாமுனிவன் வாழியே.

## நாள் பாட்டு

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீருல காரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடுநாள்
மந்த மதிப்புவி மானிடர் தங்களை வானி லுயர்த்திடுநாள்
மாசறு ஞானியர் சேரெதி ராசர்தம் வாழ்வு முளைத்திடுநாள்
கந்த மலர்ப்பொழில் சூழ்குரு காதிபன் கலைகள் விலங்கிடுநாள்
காரமர் மேனி யரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் மணவாளமுனிப்பர னவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடு மைப்பசியில் திருமூலமதெனுநாளே.

## மங்களம்

ஸ்ரீமதே ரம்ய ஜாமாத்ரு முநீந்த் ராய மஹாத்மநே /
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீ நித்யமங்களம் //

துலா மூலாவதீ ர்ணாய தோஷிதாகில ஸூரயே /
ஸௌம்யஜாமாத்ரு முநயே ஸேஷாம் ஸாயாஸ்து மங்களம் //

ஆசாரியன் - திருவாய்மொழிப்பிள்ளை

பல இடங்களிலும் வைணவ சமயத்தை பரப்பவும், அருளிச் செயல்களின் தாத்பர்யங்களை எடுத்துரைக்கவும், இவர் திருவடிகளில் ஆஸ்ரயித்த கிழ்கண்ட ஸ்வாமிகளை அஷ்டதிக்கஜங்காளக நியமித்தார்.

வானமாமலை ஜீயர், பத்தங்கிபரவஸ்து பட்டர்பிரான் ஜீயர், திருவேங்கட ராமானுஜ ஜீயர், கோயில் கந்தாடை யண்ணன், ப்ரதிவாதி பயங்கரமண்ணா, எறும்பியப்பா, அப்பிள்ளை, அப்பிள்ளார்.

இவர்கள் தவிர நவரத்நங்களான ஸிஷ்யர்களும் உண்டு. ஸேனை முதலியாண்டான் நாயனார், சடகோப தாஸரான நாலூர்சிற்றாத்தான், கந்தாடை போரேற்றுநாயன், ஏட்டூர் சிங்கராசார்யர், கந்தாடை அண்ணப்பன், கந்தாடை திருக்கோபுரத்து நாயனார், கந்தாடை நாரணப்பை, கந்தாடை தோழப்பரப்பை, கந்தாடை அழைத்து வாழ்வித்த பெருமாள். இவர்களைத் தவிர, மாமுனிகளின் பூர்வாஸ்ரமத் திருக்குமாரர் ராமானுஜாசார்யர், திருப்பேரர் ஜீயர் நாயனார் என்று ப்ரஸித்தரான அழகிய மணவாள நாயனார்.

<u>இவர்களின் பெருமயை கீழே கண்போம்.</u>

கோயில் கந்தாடை யண்ணன் (உடையவருக்கு முதலியாண்டானைப்போலே) இவருக்குப் பாதுகாஸ்தானீயராயிருப்பர். எறும்பியப்பா (வடுகநம்பியைப்போலே) தேவு மற்றறியாதே அத்யந்தாபிமதராயிப்பர். ப்ரதிவாதி பயங்கரமண்ணா (ஆழ்வானைப் போலே) உசாத்துணையாயிருப்பர். அப்பிள்ளார் (உறங்காவில்லிபோலே) மடத்தில் ஸர்வபரங்களையும் நடத்திக்கொண்டு போருவர். வானமாமலை ஜீயர் (அருளாளப் பெருமாள் எம்பெருமானார் போலே) ஆஸரயித்த அன்று தொடங்கிப் பிரியாதாட்செய்திருப்பார். பத்தங்கிபரவஸ்து பட்டர்பிரான் ஜீயர் பூர்வாஸ்ரமத்திலே கோவிந்ததாஸரப்பனென்று திருநாமத்தையுடையராய் முப்பது வருஷம் பிரியாதே இருந்து மஹாவிரக்தராய் ஜீயரான பின்பும் பிரியாமல் இருந்து அடிமை செய்கையாலே எம்பாரைப்போலே பாதச்சாயாபன்னராயிருப்பர். ஜீயர் நாயனார் திருக்குருகைப்பிரான் பிள்ளானைப்போலே அத்யாதரணீயராயிருப்பர். மாமுனிகளிக்கு அநேக சிஷ்யர்கள் இருந்தனர். **(மேலே குறிப்பிட்ட விஷயங்கள் வேளுக்குடி ஸ்ரீ.உ.வே.வரதாசார்யார் ஸ்வாமி அருளியுள்ள மணவாளமாமுனிகள் வைபவம் என்கிற கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டது).**

இவர் செய்தருளின க்ரந்தங்கள் தத்வத்ரயம், ரஹஸ்யத்ரயம், ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம், ஞானசாரம், ப்ரமேயசாரம், பெரியாழ்வார் திருமொழியில் ஒருபகுதி, ராமானுஜநூற்றந்தாதி ஆக, எட்டு திவ்யப்ரந்தங்களுக்கு வ்யாக்யானங்களும், ஈட்டுக்கு ப்ரமாணத்திரட்டு ஆறாயிரம், தத்வத்ரய ப்ரமாணத்திரட்டு, ஸ்ரீவசனபூஷண ப்ரமாணத்திரட்டு, ஆர்த்திப்ரபந்தம், யதிராஜவிம்ஸதி, உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி, திருவாராதனக்ரமம், திருமங்கையாழ்வாரின் வடிவழகு, தனிப்பாடல்கள், வாழித்திருநாமம், இயல்சாத்து (தொகுத்து அருளியது), தாத்பர்யதீபம், தேவராஜமங்களம், ஸ்ரீகாஞ்சீ திவ்யதேசஸ்துதி, கோபால விம்சதி, கமலாஸ்துதி மற்றும் பல.

ஸ்ரீமணவாளமாமுனிகள் அவதார மகிமை (காஞ்சீ ஸ்வாமி அருளியதிலிருந்து எடுக்கப்பட்டது)

ஐப்பிசியில் திருமூலத்தன்று அவதரித்தருளின இவ்வாசாரியரின் அமுதிலுமாற்றவினிய பெருமையை இன்று நாம் புதிதாகப் பேசப் போகிறோமோ? எத்தனை தடவை பேசினாலும் அப்பொழுதைக்கு அப்பொழுது என்னாராவமுதமே என்னும்படியாக இருக்கும் இவர் பெருமை. எம்பெருமானார் அவ்வவதாரத்திலே சேஷித்திருந்த காரியங்களை நிறைவேற்றுவதற்கென்றே இங்ஙனே ஒரு திருக்கோலம் மீண்டும் பூண்டபடி., பெரும்பாலும் வியாக்கியான க்ரந்த ரத்னங்களை யருள்வதிலேயே இரண்டு அவதாரத்திலும் முழுநோக்கு ஆகும். அத்யுக்தி, அதிசயோக்தி யென்னும்படியான வசனவ்யக்திகளைக் கனவிலுமறியாமை இரண்டவதாரதிற்கும் அஸாதாரணமஹிமை. மயங்கவைத்தல், வலிந்து கூறல், நலிந்து பொருள் கொள்ள வேண்டுதல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதும் இடம் தாராமே தெள்ளமுதெனும் திவ்யஸ்ரீஸூக்திகளை அருளுந்திறன் இவ்விரண்டு அவதாரத்திலெயே கண்டதாகும்.

மணவாளமாமுனிகள் திருவவதாரிக்காவிடில் பிள்ளைலோகாசார்யருடைய பரமகாருணிகத்வமும் கன்னவிலுங் காட்டகத்தோர்வல்லிக் கடிமலரின் நன்னறுவாசம் மற்றாரானுமெய்தாமே மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்துபோலாகுமத்தனை. பிள்ளைலோகாசார்யார் அருளிய அஷ்டாதச ரஹஸ்யங்களுள் தலைசிறந்து விளங்கும் முமுக்ஷுப்படி, தத்வத்ரம், ஸ்ரீவசநபூஷணமென்னும் மூன்று ரஹஸ்யங்களுக்கு இவருடைய வியாக்கியானங்கள் இல்லையேல் இம்மாஞாலம் இருள்தருமா ஞாலமேயென்னத் தட்டுண்டோ?

மாமுனிகளுக்கு விசதவாக்சிகாமணி என்றொரு பெயரும் வழங்கிவருகின்றது. இதனை முதன் முதலாக அளித்த மஹாநுபாவர் யாரோ அறிகின்றிலோம். மரும மறிந்து அளித்த அந்த விருது இவ்வாசார்ய சிகாமணியொருவர்க்குத்தான் ஏற்கும். நீறுபூத்த நெருப்பு என்ன நின்ற இவ்வாசிரியரின் திருவாக்குப்போல் இவ்வுலகில் இதுகாறும் கண்டதில்லையென்றால் இனிமேலா காணப்போகிறோம். இவருடைய திவ்ய மங்கள விக்ரஹமும், திருவுள்ளமும் ஸத்வ குணமொன்றே வடிவெடுத்ததாயிருந்த தென்பது இவரது திருவாக்குகளில் அசஷரந்தோறும் புலப்படுகின்றது. ஸகல சாஸ்த்ரார்த்தங்களையும் வெகு அழகாகத் திருவுள்ளத்திலே யடக்கிக்கொண்டு நாட்பூ அலர்ந்தாற்போலே ஸ்ரீஸூக்திகளை ஏற்றக் குறைவின்றி அமைந்திருக்கிற அழகு என்னே ! என்னே ! என்று உள்ளம் குழைகின்றது அத்தனை.

பல சொல்லி என்? ஸாரமாக ஒன்று சொல்லித் தலைக்கட்டுவோம். அப்திர் லங்கித ஏவ வாநரபடை: .. என்று முராரியென்கிற ஒரு மஹாகவி சொல்லிகிறார் - வாநரவீரர்கள் கடலைக்கடந்து அப்பால் சென்று விட்டார்களெனிலும் கடலின் ஆழத்தை அவர்கள் சிறிதும் அறியகில்லார்கள். கடலினுள்ளே பாதாளம் விரையில் அமிழ்ந்து கிடந்த மந்தர மலைக்கன்றே அந்தஆழம் தெரியும் - என்பது இந்த ச்லோகத்தின் கருத்து. ஜ்ஞாதாக்களென்று பேர்படைத்த மற்றவர்கள் எல்லோரும் வானரமுதலிகளின் ஸ்தானத்திலேயாய், மணவாளமாமுனிகள் ஒருவரே மந்தர மலையின் ஸ்தானத்திலே எண்ணக்கூடியவராக உள்ளார். ஆசார்யரென்கிற சொல்லுக்கு, மாமுனிகளின் திருவாக்கையேதான் இலக்காகக் கொள்ளத்தக்கவை என்றும் நிஷ்பசஷபாதர்களின் ஸித்தாந்தம்.

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடவும், சீருலாகாரியர் செய்தருள் நற்கலை தேசு பொலிந்திடவும், மந்தமதிப்புவி மானிடர் தங்களை வானிலுயர்திடவும், மாசறு ஞானியர் சேரெதிராசர்தம் வாழ்வு முளைத்திடவும், கந்த மலர்ப்பொழில் சூழ் குருகாதிபன் கலைகள் விளங்கிடவும், காரமர்மேனி யரங்கநகர்க்கிறை கண்கள் களித்திடவும். இந்த நிலந்தனில்வந்து உதயஞ்செய்தபரமாசார்யரன்றோவிவர். நமது ஆழ்வார்களும் ஆசார்யளுமெல்லாரும் ஒருங்கே திரண்டு அவதரித்த அவதாரமான இம்மாமுனிகளின் தனியனையும் வாழித்திருநாமங்களையும் இப்பரத கண்டம் முழுவதும் அநுஸந்தித்து உஜ்ஜீவனம் பெறுகின்றது.

**மாமுனிகளின் மஹிமை (வித்யாபூஷணம் திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ.உ.வே.அண்ணங்கராசார்யர் ஸ்வாமி அருளியதிலிருந்து எடுக்கப்பட்டது)**

திருவவதாரதின வைபம் **பாதோபாவம்** என்கிற ஸ்லோகத்தினால் மாமுனிகளின் திரு அவதாரதின வைபவத்தை முன்னோர் வெளியிட்டனர். ஸ்ம்ஸ்க்ருதத்தில் கடபயாதி க்ரமம் ஒன்று உண்டு. அதன்படி **பாதோபாவம்** என்பதினால் 4471 என்கிற எண்கிடைக்கறது. கதகல்யப்தம் 4471 ஸாதாரண வருஷத்திய துலாசுக்ல சதுர்த்தி குருவாரத்தோடு கூடின திருமூலத்தில் மாமுனிகளின் திருவவதாரம். நசஷத்திரத்தின் பேர் மாமுனிகளின் அவதாரத்திற்குக் காரணமானதினால் ஸார்த்தமாயிற்று.

வருஷநாமம் மாமுனிகளின் அவதாரம் எல்லாச் சேதநர்களுக்கும் ஸாதாரணம் - பொதுவானது என்பதைக் குறிப்பிடுகிறது. நசஷத்ரநாமம் இது ஸர்வஸ்ரேயஸ்ஸூக்கும் காரணம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்தத் திருநாளின் வைபத்தை பிரதிவாதி பயங்கரம் அண்ணா வரவரமுநிஸதகத்திலே யதவதரண மூலம் முக்திமூலம் ப்ரஜாநாம் என்றும், எறும்பியப்பா வரவரமுநி ஸதக்கதிலே யந்மூலமாஸ்வயுஜமாஸி என்னும் ஸ்லோகத்திலும் அருளிச்செய்தார்கள். மேலும் எறும்பியப்பா ஆலம்பநஸ்ய மம ஸௌம்யவரஸ்ய ஜந்ம மூலம் விபாதி ஸதுலம் விதுலம் ச சித்ரம் என்று இத்திருமூலத்தின் பெருமையை விரோதா பாஸாலங்காரத்தினால் வெளியிட்டார். துலாமாஸத்தில் அமைந்தமையால் ஸதுல மான இம்மூலம் இதற்கொப்பான வேறொரு நாளில்லாமையால், விதுலமாகவும் (ஒப்பற்றதாகவும்) விளங்குகிறதாம்.

திருவவதார ரஹஸ்யம் மாமுனிகள் எம்பெருமானாருடைய அபராவதராம் என்பது மாமுனிகள் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. **ஸ்ரீமாந் ஸுந்தரஜாமாத்ரு முநி: பர்யாயபாஷ்ய க்ருத்** என்று அண்ணாவும், **வரவரமுநி: ஸ்ரீமாந் ராமாநுஜோ ஜயது சஷிதௌ** என்று எறும்பியப்பாவும் அருளிச்செய்தார்கள்.

ஸ்ரீவைகுண்டநாதனுடைய திவ்யாஜ்ஞையால் திருவநந்தாழ்வான் இக்கலியுகத்தில் 200 வருஷம் அவதரித்திருந்து உபயவேதாந்த க்ரந்தங்களை ப்ரவர்த்திப்பித்துச் சேதநர்களை வாழ்வித்தருள ஸங்கல்பித்துக் கொண்டார். முதலில் எம்பெருமானாராய் அவதரித்து ப்ரஹ்மஸூத்ர கீதாப்ரஸ்தாநங்களை, ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளை அருளிச் செய்ததன் மூலமாக ப்ரவர்த்திப்பித்து 120 வருஷங்கள் இவ்விபூதியை அலங்கரித்தார். ஸ்ரீவைகுண்டநாதனை ஸேவிக்கவேணும் என்னும் ஆசையினாலே திருநாட்க்கு எழுந்தருளினார். மறுபடியும் அருளிச்செயல்

ரஹஸ்ய ப்ரஸ்தாநங்களை பஹுமுகமாக ப்ரவர்த்திப்பிக்க, பகவந்நியமனத்தினால் மாமுனிகளாக அவதரித்தனன். அவதார ப்ரயோஜநம் தலைக்கட்டின உடனேயே தன்னுடைச் சோதியை சேர்ந்தனன்.

மாமுனிகள் ஸேஷா அவதாரம் என்பதை ஸதகத்தில் துக்தோதந்வத் தவளமதுரம் ஸுத்த ஸத்த்வைகரூபம் ரூபம் யஸ்ய ப்ரதயதிதாரம் யம் பணீந்த்ராவதாரம் என்று அண்ணாவும், நித்யம் பத்யு: பரிசரணதோ வர்ணதோ நிர்மலத்வாத் என்கிற ஸ்லோகத்தினால் எறும்பியப்பாவும் மூதலித்தனர். மாமுனிகள் ஸேஷாவதாரமென்பது இன்னும் பல ப்ரமாணங்களாலும் ப்ரத்யசஷத்தாலும் ஸித்தித்தபடியால் விப்ரதிபத்திக்கிடமில்லை.

## யதிவர வரவரமுநிகளுக்குள்ள ஒற்றுமை

1. எம்பெருமானார் ப்ரஹ்மமீமாம்ஸாதிகளுக்கும், மாமுனிகள் ஸ்ரீவசநபூஷணாதி ஸாஸ்த்ரங்களுக்கும் பாஷ்யமருளிச்செய்தார்கள்.
2. எம்பெருமானார் 74 ஸிம்ஹாஸனாதிபதிகளையும், மாமுனிகள் அஷ்டதிக் கஜங்களையும் ஸ்தாபித்தார்கள்.
3. பெரியபெருமாளின் நியமனத்தால் இருவரும் கோயிலை நித்யவாஸமாகக் கொண்டுருந்தார்கள்.
4. இருவரும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தனர்.
5. எம்பெருமானார் திருக்குறுங்குடி நம்பிக்கும், மாமுனிகள் திருவரங்கச் செல்வனார்க்கும் ஆசார்யரானார்கள்.
6. ஸஹஸ்ரபணாமண்டல மண்டிதமான நிஜரூபத்தை (ஆதிசேஷன்) இருவரும் காட்டி அருளினார்கள்.
7.பகவத்பாகவதாநுவர்த்தந விரோதிகளான ஸ்ம்ஸார பந்தத்தை இருவரும் சடக்கென ஸந்யஸித்தனர். (இருவரும் ஸன்யாஸாஸ்ரம் மேற்க்கொண்டனர்)
8. உகந்தருளின நிலங்களில் அதிமாத்ரமான ஈடுபாடும் அங்காங்கே திருவாராதனாதிகள் குறையற நடக்கும்படி கட்டளையை ஏற்படுத்தினபடியும் இருவர்க்கும் ஒக்கும்.
9. இருவருடைய திருமேனியும் ஸமாந லசஷணங்களோடு கூடினதாய் விளங்கும். எம்பெருமானாருடைய வடிவழகை வருணிக்கும் காஷாய ஸோபி என்கிற ஸ்லோகம் ப்ரஸித்தமானதே. அதேபோல் மாமுனிகளின் வடிவழகை அண்ணா ஸதகத்தில் ஸாதித்த ராஜச்சீதமயூக மண்டல என்கிற ஸ்லோகமமும் வருணிக்கிறது.
10. திவ்யதேஸத்தெம்பெருமான்களால் இருவருடைய வைபவமும் ப்ரகாஸிப் பிக்கப் பட்டது.
11. எம்பெருமானார் ஒரு நாயகத்தை (திருவாய்மொழி 4ஆம் பத்து 1ஆம் திருவாய்மொழி) திருநாரயணபுரத்திற்கும், மாமுனிகள் தீர்ப்பாரையாமினியை (திருவாய்மொழி 4ஆம் பத்து 6ஆம் திருவாய்மொழி) மன்னார்குடி ராஜகோபாலனுக்கும் ஸமர்ப்பித்தனர். இன்னுமிப்படிப்பலபடியாலும் ஒற்றுமை நிர்வஹிக்கலாம்.

எம்பெருமானாருக்கு ஸித்தாந்த ஸ்தாபத்திற்கு உறுப்பாக பிரமதங்களை நிரஸிக்கவேண்டிய பணியும் சாலவுண்டு. மாமுனிகளோ பிரமதநிரஸனத்தில் ஈடுபடாமல் அருளிச்செயல் ரஹஸ்யாதிதி வ்யாக்யாந ப்ரவசநாதிகளையே முழுவதும் பொழுதுபோக்காகப் பெற்றிருந்தார். சரம பர்வமான யதீந்த்ர

சரணப்ராவண்யமும், அதற்குகநுகுணமான நிஷ்டா விஸேஷமும் இவர்க்குத் தன்னேற்றம்.

**தேஸிகோத்தமர்:** ஸ்ருதி எம்பெருமானைக் கண்ணுக்கும் கண்ணாவான் என்னுமாபோலே எறும்பியப்பா மாமுனிகளை தேஸிகர்களுக்கும் தேஸிகரென்றார். ஞானமனுட்டானமிவை என்கிற பாசுரத்தில் மாமுனிகள் ஸதாசார்ய ஸம்பந்தமுள்ளவனுக்குத் திருமால் தானே வைகுந்தம் தரும் என்றருளிச்செய்தார். மாமுனிகளின் ஆசார்யகுணபுர்த்தி முதலான வைபங்களைப் பெரியபெருமாள் தாமே இவரிடத்தில் ஸிஷ்யராய் பகவத் விஷயம் கேட்டுகந்து ஸ்ரீஸைலேஸத் தனியனையுமிட்டருளி வெளிப்படுத்தினார். அவதாரங்களில் கண்ணனுக்கும், ஆழ்வார்களில் கலியனுக்கும் உண்டான ஏற்றம் போலே, ஆசார்யர்களில் மாமுனிகளுக்கும் ஏற்றம் விஞ்சியிருக்கும். ஆகையால் மாமுனிகளே தேஸிகோத்தமர்.

**குருபரம்பராபூர்த்தி :** பெரியபெருமாள் தொடக்கமாகத் தொடந்துவரும் பொதுவான நம் குருபரம்பரை மாமுனிகளிடத்தில் பூர்ணமாயிற்று. மாமுனிகள் பர்யந்தமான இந்த குருபரம்பரையை பவிஷ்யத் தர்ஸியான ஸ்ரீநிகமாந்த மஹாகுரு திருவுள்ளம்பற்றியே யதிராஜஸப்ததியில் அமுநா தபநாதிஸாயிபூம்நா யதிராஜேந நிபத்தநாயகஸ்ரீ: என்கிற ஸ்லோகத்தில் இதை ஒரு முத்துஹாரமாகவும் இதின் நடுநாயகம் எம்பெருமானாரென்றும் நிருபித்தருளினார். எம்பெருமானாராகிய நாயகரத்நத்திற்கு முன்னே எட்டாவது முத்துமணி திருமால் பின்னே எட்டாவது முத்துமுணி மாமுனிகள். ஆகவே இந்த குருபரம்பரா ஹாரத்திற்கு யதிராஜர் நடுநாயகமாய் வியங்குகிறார் என்பதைக் குறிப்பாகக்காட்டினபடி. எம்பெருமானாருக்குப்பின் பட்டருடைய ஆசார்யரான ஆழ்வானையும் கூட்டி குருபரம்பரையை யதிராஜ நாயகமக நிர்வஹிக்கக்கடவது.

**விஸதவாக்ஸிகாமணி:** நம் பூர்வாசார்யர்களில் விஸதவாக்ஸிகாமணி என்னும் விருது மாமுனிகளுக்கு ஏற்பட்டது. ஆழ்ந்த பொருள்களையும் தெளிவாகவும் ஸுக்ரஹமாகவும் ஸரஸமாகவும் அருளிச் செய்யவல்ல ஆற்றலைப் படைத்தவர் இவரே ஆவார். அப்ராமாணிகமாகவோ நிர்மூலமாகவோ அநபேசஷிதமாகவோ ஒரு ஸ்ரீஸுக்தியையும் அருளிச் செய்யார். இவர் அருளிய வ்யாக்யாநங்கள் இவை கொண்டோ வ்யாக்யாந லசஷண மிட்டது என்னும்படி ஸகல லசஷண யுக்தமாய் விளங்கிநிற்கின்றன.மாமுனிகளின் ஸ்ரீஸுக்திகளின் மாதுர்யாதிகுண வைபவத்தை அண்ணா ஸதகத்தில் பல ஸ்லோகங்களால் அநுபவித்தருளினார்.

**எல்லாம் மாமுனிகளே:** ஆசார்யக்ருத்யமும், புருஷகார க்ருத்யமும், ஈஸ்வரக்ருத்யமும் எல்லாம் மாமுனிகளினிடத்தில் பூர்ணமாயிருக்கிறது என்று எறும்பியப்பா ஸதகத்தில் அருளிச்செய்தார். மாமுனிகளையே ஸகலவிதமான ப்ராப்யமும், ப்ராபகமும் என்ற த்யவஸித்திருந்தால், மாமுனிகளின் இன்னருளால் நமக்கு ஒரு குறையும் வராது என்பது திண்ணம். இந்த எண்ணத்தையும் முாமுனிகளே நமக்குத் தந்தருள வேணும்.

ஸபவது வரயோகீ நஸ் ஸமஸ்தார்த்த மூலம்.

## ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தனியனுக்கு உள்ள தனிப்பெருமை

விபவத்திலும், அர்ச்சாவதாரத்திலும், பலரிடத்தில் ஸிஷ்யவ்ருத்தி செய்து உகந்திருக்கிறான் எம்பெருமான். விபவத்தில் வஸிஷ்டர், விஸ்வாமித்ரர், ஸாந்தீபினி முதலானார்க்கு ஸிஷ்யனானான். திருக்கண்ணமங்கை பத்தராவிப் பெருமாளை கண்ண! நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள்தானே (பெரிய திருமாழி 7ஆம் பத்து, 10ஆம் திருமொழி, 10ஆம் பாசுரம்) என்று பாசுரமிட்டபடியால், எம்பெருமான் திருமங்கையாழ்வருக்கு அவதாராந்தரத்தில் ஸிஷ்யரானார். திருக்குறுங்குடி ஸ்ரீவைஷ்ணவநம்பி எம்பெருமானார்க்கு ஸிஷ்யனாய் உகந்தார்.

ஆனால் மாமுனிகள் ஒருவரிடத்திலேயே நம்பெருமாள் நேரேயே பரிபூர்ண ஸிஷ்ய வ்ருத்திசெய்து, மிகவும் உகந்தருளி, ஸ்ரீசைலேசதயாபாத்ரம் என்கிற தனியனையும் அருளிச்செய்து, தான் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இடமெங்கும் இத்தனியன் தன் முன்பு ஸேவிக்கத்தக்கது என்று நியமித்தருளினார். ப்ரிதி தினமும் விஸ்வருபத்தில் ஸ்வாசார்யன் தனியனைத் திருச்செவிசாத்திய பிறகுதான் நம்பெருமாள் பஞ்சாங்க ஸ்ரவணம் செய்தருளுகிறார். இதுவே ஸ்ரீசைலேசதயாபாத்ர தனியனுக்கு உள்ள தனிப் பெருமையாகும். இது தன்னை தென்னரங்கர் சீரருளுக்கு இலக்காகப் பெற்றோம் என்று மாமுனிகள் தாமும், அவரது ஸிஷ்யப்ரஸிஷ்யர்கள் பல பல நூல்களிலும் வெளியிட்டருளினார்கள். (வேதபாஷ்யப்ரவீண வேதஸாரஜ்ஞ ஸலசஷணகநபாடீ திருக்கண்ணபுரம் ஸ்ரீ.உ.வே.ஸௌரிராஜய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீரங்கத்தில் வசித்தவர், அருளியுள்ள ஸ்ரீசைலேசதயாபாத்ர வைபவம் என்கிற கட்டுரையிலிந்து எடுக்கப் பட்டது).

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன்
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை – உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மைக்
கரத்தாலே தீண்டல் கடன்.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன்தண் தமிழ்நூல்வாழ – கடல்சூழ்ந்த
மன்னுலகம் வாழ மணவாளமாமுனியே
இன்னும் ஒரு நூற்றாண்டு இரும்.

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ரு முநீந்த்ராய மஹாத்மநே /
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீ நித்ய மங்களம் //

பெரிய ஜீயர் திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: